உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 01.08.2026 • மலர் 04 • இதழ்: 213 • சனி
• Edition : Nagercoil • 01.08.2026 • Vol : 04 • Issue : 213 • Page : 4 • Rs. 5/-

# வினாத்தாள் கசிவு தடுப்பு மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றம்

புது டெல்லி: மக்களவையைத் தொடர்ந்து நேற்று மாநிலங்களவையிலும் வினாத்தாள்கசிவு தடுப்பு மசோதா நிறைவேற்றப்பட்டது

நீட் தேர்வு வினாத்தாள் கசிவை கண்டித்து நாடு முழுவதும் மாணவ, மாணவியர் போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து வினாத்தாள் கசிவு தடுப்பு மசோதா நிறைவேற்றப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்தார்.

இதன்படி கடந்த 27ம் தேதி மக்களவையில் பொதுத் தேர்வுகள் (முறைகேடுகள் தடுப்பு) திருத்த மசோதா 2026 தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 28ம் தேதி மசோதா மீது விவாதம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து இந்த மசோதா நேற்று முன்தினம் மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

இந்த சூழலில் மக்களவை நேற்று காலை 11 மணிக்கு கூடியது. நாடாளுமன்ற பேரணியில் மாணவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டதை கண்டித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால் பிற்பகல் 2 மணி வரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகலில் அவை கூடிய போது கூச்சல், குழப்பம் நீடித்ததால் பிற்பகல் 3 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் அவை கூடிய போது வழக்கம்போல அமளி ஏற்பட்டது. இதனால் 3.30 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

வந்தே மாதரம் மசோதா நிறைவேற்றம்

மீண்டும் அவை கூடிய போது தேசிய கவுரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா 2026 தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா மாநிலங்களவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு நடுவே மக்களவையில் நேற்று குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது.

புதிய மசோதாவின்படி வந்தே மாதரம் பாடலை அவமதிப்போருக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். மசோதா நிறைவேறிய பிறகு மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.



மாநிலங்களவை நேற்று காலை 11 மணிக்கு கூடியது. அப்போது மத்திய சுகாதார அமைச்சர் ஜே. பி. நட்டா பேசும் போது, "அனைத்து பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு நாடாளுமன்றத்தை முடக்கி வருகின்றன" என்று குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் எம்பி பிரமோத் திவாரி பேசும் போது, "நாடாளுமன்ற பேரணியில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தடியடி குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவைக்கு வந்து விளக்கம் அளிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். அமைச்சர் அமித் ஷா அவைக்கு வராததை கண்டித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் வெளிநடப்பு செய்தனர்.

இதன்பிறகு பிற்பகல் 2 மணிக்கு மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், பொதுத் தேர்வுகள் (முறைகேடுகள் தடுப்பு) திருத்த மசோதா 2026ஐ தாக்கல் செய்தார். அப்போது அவர் பேசியதாவது: யுபி எஸ்சி, ஆர்ஆர்பி, ஐபிபிஎஸ், தேசிய தேர்வு முகமை ஆகியவை போட்டித் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகளை நடத்தி வருகின்றன. கடந்த காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஏராளமான போட்டி, நுழைவுத் தேர்வுகளின் வினாத்தாள்கள் கசிந்தன.

தற்போதைய தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வினாத்தாள் கசிவை தடுக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக நாடாளுமன்றத்தில் பொதுத் தேர்வுகள் (முறைகேடுகள் தடுப்பு) திருத்த மசோதா 2026 தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசியதாவது: வினாத்தாளை கசிவில் தொடர்புடையவர்கள் சுதந்திரமாக திரிகின்றனர். வினாத்தாள் கசிவால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மாணவர்கள் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். வினாத்தாள் கசிவுக்கு எதிராக போராடிய இளைஞர்கள் பல்வேறு கொடுமைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மசோதாவில் தண்டனை காலம், அபராதம் அதிகரிக்கப்பட்டு உள்ளது. இந்த மசோதாவால் எந்த பயனும் இல்லை. கடந்த 2024ல் நீட் வினாத்தாள் கசிந்தது. மீண்டும், மீண்டும் நீட் வினாத்தாள் கசிவது ஏன்? கடந்த 2024ம் ஆண்டு நீட் வினாத்தாள் கசிவு வழக்கில் கைது செய்யப்பட்ட முக்கிய குற்றவாளியை நிரபராதி என்று சிபிஐ தற்போது கூறுகிறது. வினாத்தாள் கசிவு தொடர்பான வழக்கில் சிபிஐ வழக்கறிஞர்கள் ஆஜராவதைகூட தவிர்க்கின்றனர்.

பிரதமர் மோடி முக்கிய ஆலோசனை

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் நரேந்திர மோடியின் அலுவலகத்தில் நேற்று உயர் நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பிரதமர் மோடி தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங், ஜெய்சங்கர், நிர்மலா சீதாராமன், ஜே.பி.நட்டா, பியூஷ் கோயல், ஹர்தீப் சிங் புரி, சர்வானந்த சோனோவால், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரை எதிர்க் கட்சிகள் தொடர்ந்து முடக்கி வருவது குறித்து கூட்டத்தில் விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. மழைக்கால கூட்டத் தொடரில் நிறைவேற்ற வேண்டிய முக்கிய மசோதாக்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

## குமரி மலையோர கிராமம் தச்சமலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



நாகர்கோவில், ஆக. 1

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு வட்டத்துக்குட்பட்ட கல்லாடிமாமூடு மினி விளையாட்டு அரங்கம், தச்சமலை அரசு தொடக்கப்பள்ளி ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

கல்லாடிமாமூடு பகுதியில், ரூ.3 கோடி மதிப்பீட்டில் அரசு சார்பில் புதிதாக மினி அரங்கம் கட்டப்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு அரங்கம் வாயிலாக கல்லாடி மாமூடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள், பொது மக்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காகத் திறக்கப்பட்டு, தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, நவீன வசதிகளுடன் கூடிய இந்த மினி அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உடற்பயிற்சி செய்ய ஏதுவான பகுதிகள், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான வசதிகளும் உள்ளது.

தொடர்ந்து விளையாட்டு மைதானத்தில் பொதுகழிப்பிடம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், வேலி மற்றும் அரங்கத்திற்கு வரும் வழிகளில் தெருவிளக்குகள் அமைப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் வைத்துள்ளனர். அவர்களின் கோரிக்கையின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட விளையாட்டு அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட தச்சமலை அரசு தொடக்கப்பள்ளியினை நேரில் பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. மாணவர்களுக்கு தயார் செய்யப்பட்ட மதிய உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஏற்றக்கோடு பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் (2025 2026) ரூ.28.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அங்கன்வாடி மையம் கட்டுவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெறவில்லை. அருகில் உள்ள நிலப்பிரச்சனையினைவிரைந்து முடித்து, பணிகளை துவக்க வட்டாட்சியர் உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் மாவட்ட விளையாட்டு அலுவலர் வினு, திருவட்டாறு வட்டாட்சியர் மரகதவல்லி, வட்டார வளர்ச்சி அலுவலர், துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



தூத்துக்குடி ரயில் நிலையத்தில் கிழக்கு மண்டல மாநகராட்சி குழு மற்றும் ரயில்வே காவல் துறை இணைந்து கூட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது அப்போது இரயில்வே பயணிகளிடம் சோதனை செய்த போது தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை 2.760 கிலோ புகையிலையை பயணிகளிடமிருந்து அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்

## முன்னாள் விளையாட்டு வீரர்கள் 13 பேருக்கு ஓய்வூதிய ஆணை

### அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வழங்கினார்



சென்னை: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம், பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், விளையாட்டுத் துறைக்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும், ஓய்வுக்கு பிறகு அவர்களது வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் விதமாகவும், 58 வயதை எட்டிய நலிந்த நிலையில் உள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு மாதம்தோறும் ரூ.6 ஆயிரம் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக, பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ள 13 முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதிய ஆணைகளையும், 3 பேருக்கு குடும்ப ஓய்வூதிய ஆணைகளையும், அதற்கான நிலுவைத் தொகையாக ரூ.14.13 லட்சத்துக்கான காசோலைகளையும் சென்னை தலைமைச்செயலகத்தில் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நேற்று வழங்கினார்.

இத்திட்டத்தின்கீழ் 82 நலிந்த நிலையில் உள்ள முன்னாள் விளையாட்டு வீரர்கள், 13 குடும்ப ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெற்று பயனடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஓய்வூதிய ஆணைகளுடன் சேர்த்து, 4 பெண்கள், 2 ஆண்கள் என மொத்தம் 6 பயிற்றுநர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் அமைச்சர் வழங்கினார்.

இந்த நிகழ்வில் விளையாட்டுத் துறை செயலர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் ரெ. சுமன், பொது மேலாளர் ல. சுஜாதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தூத்துக்குடி மாநகராட்சிக் மாதாந்திர சாதாரணக்கூட்டம்

### மேயர் என்.பி. ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது

தூத்துக்குடி மாநகராட்சிக் மாதாந்திர சாதாரணக்கூட்டம் மேயர் என். பி. ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி ஆணையர் ப்ரியங்காமற்றும்துணை மேயர் ஜெனிட்டா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாதாந்திர சாதாரண கூட்டத்தைத் தொடங்கி வைத்து மேயர் ஜெகன் பெரியசாமி பேசியதாவது: தூத்துக்குடி மாநகராட்சியில் தொடர்ந்து பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்னாள் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தபடி, மாநகராட்சியின் 60 வார்டுகளிலும் விரைவில் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது வரவிருக்கும் மழைக்காலத்தை எதிர்கொள்ளும் வகையில் பக்கிள் ஓடையை அகலப்படுத்தும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. மேலும் நகரில் உள்ள சிறிய மற்றும் பெரிய கழிவுநீர் கால்வாய்கள் அனைத்தும் முழுமையாகத் தூர்வாரப்பட உள்ளன.



பொதுமக்கள் குடிநீரை வீணாக்கக் கூடாது. குடிநீரைச் செடிகளுக்குப் பாய்ச்சுவதற்கும், கட்டிடப்பணிகளுக்கும் பயன்படுத்துவது தவறான செயலாகும். இதனை மீறுபவர்கள் மீது மாநகராட்சி நிர்வாகம் சார்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இக்கூட்டத்தில் திமுக மாமன்ற உறுப்பினர் சுரேஷ்குமார் பேசுகையில், தூத்துக்குடி நகரில் அடிக்கடி ரயில்வே கேட்டுகள் மூடப்படுவதால் பொதுமக்கள் பெரும் போக்குவரத்து நெரிசலிலும் சிரமத்திலும் சிக்கித் தவிக்கின்றனர். இதற்கு மாநகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். அதற்குப் பதிலளித்துப் பேசிய மேயர், பொது மக்களின் சிரமத்தைக் குறைக்கும் வகையில், தூத்துக்குடி 1ஆவது கேட் பகுதியில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து தற்போது தீவிர ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்தார். மாற்றுக் கட்சிஉறுப்பினர் வெளிநடப்பு முன்னதாக, இக்கூட்டம் தொடங்கியபோது மாற்று கட்சி சேர்ந்த உறுப்பினர் மந்திரமூர்த்தி, தனக்கு மன்றத்தில் உரிய இருக்கை ஒதுக்கப்படவில்லை எனக் குற்றம்சாட்டி வெளிநடப்பு செய்தார். தொடர்ந்து, மாநகராட்சியின் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் தொடர்பான தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.



ஈரோடு மாவட்ட சட்ட அலுவலர்களுக்கான காலாண்டு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாள (பொது) தேன்மொழி, ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தைச் சேர்ந்த சட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் .



கோவில்பட்டி நகர் மன்ற கூட்டத்தில் 32வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் எம்.ஆர்.வி. கவியரசன், கிடப்பில் போடப்பட்டுள்ள புதிய வீட்டின் வரிவிதிப்பு ரசீதுகள், பெயர் மாற்றம் செய்யப்படும் வரிவிதிப்பு ரசீதுகள் மற்றும் விடுபட்ட சாலை பணிகள், குடிநீர் இணைப்புகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உடனடியாக செய்து தர வேண்டி கோரிக்கை வைத்து பேசினார்



# சதாவதானி செய்குதம்பி பாவலர் பிறந்த தினம் முன்னிட்டு கலெக்டர் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை

நாகர்கோவில், ஆக.1

கன்னியாகுமரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட இடலாக்குடியில் மகாமதி சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம் உள்ளது. நேற்று அவரது 152வது பிறந்த நாளை முன்னிட்டு, நினைவு மண்டபத்திலுள்ள, அன்னாரது திருவுருவ படத்திற்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் கூறுகையில்:

குமரி மாவட்டத்தில் பிறந்த சதாவதானி செய்குதம்பி பாவலர் புகழ் என்றும் மறவாமல் இந்திய மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் எழுதிய நூல்களை நாட்டுடைமை ஆக்கியதோடு, மத்திய அரசிற்கு பரிந்துரைத்து சதாவதானி செய்குதம்பி பாவலர் தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது. பாவலர் புகழ் என்றென்றும் வரலாற்றில் நிலைத்திருக்கும். என கூறினார்.

இந்நிகழ்ச்சியில், ஆஸ்டின் எம்எல்ஏ, நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத் பிரைட், பாவலர் செய்குதம்பி மகன் வழி பேரன் கவிஞர் ஜமால் முகமது, கொள்ளு பேரன் ஷபிக் மீரான், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# எட்டையபுரத்தில் மகாகவி பாரதியார் வணங்கிய அருள்மிகு தேவி ஸ்ரீ காளியம்மன் ஆலயத்தில் ஆடி வெள்ளி சிறப்பு பூஜை

எட்டயபுரம் ஆக.01.

தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகளுக்கு மேல் பழமையான அருள்மிகு தேவிஸ்ரீ காளியம்மன் திருக்கோவிலில் ஆடி மாத வெள்ளிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜை நடைபெற்றது. மேலும் மகாகவி பாரதியார் வணங்கிய இந்த சிறப்பு வாய்ந்த திருக்கோவிலில் அதிகாலையிலேயே கோவில் நடை திறக்கப்பட்டு பிரசித்தி பெற்ற அம்மனுக்கு பால், இளநீர், மஞ்சள், சந்தனம், குங்குமம், திருநீறு, தயிர் உள்ளிட்ட 21 வகை



யான அபிஷேகப் பொருட்களால் சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டு அலங்கார தீபாராதனை காட்டப்பட்டது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு மனமுருகி சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இந்த திருக்கோவிலில் வைத்து தான் காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் என்ற பாடலை மகாகவி பாரதியார் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வண்டல் மண் எடுக்க லஞ்சம் வாங்கிய நீர்வளத்துறை அதிகாரி கைது

திருச்சி ஆக.1

நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ள மாங்குளத்தில் வண்டல் மண் அள்ள லஞ்சம் வாங்கிய புதிய கட்டளை வாய்க்கால் பிரிவு1 பணி ஆய்வாளர் கைது செய்யப்பட்டார். இது குறித்த விபரம் வருமாறு;

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், முடிகண்டத்தை சேர்ந்த செல்லையா மகன் எட்வர்ட் என்பர் முடிகண்டத்தில் உள்ள விவசாய நிலத்திற்கு மேக்குடி கிராமத்தில் நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ள மாங்குளத்திலிருந்து ஸ்ரீரங்கம் வட்டாட்சியரிடம் உரிய அனுமதி பெற்று வண்டல் மண் அள்ளுவதற்கு நீர்வளத்துறை பணி ஆய்வாளர் லோகநாதன் என்பவரை தொடர்புகொண்டுள்ளார்.

அவரோ வண்டல் மண் எடுப்பதற்கு ரூ.4000/ லஞ்சம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத எட்வர்ட், இதுதொடர்பாக நேற்று முன்தினம் திருச்சி மாவட்ட, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுத்தார்.

அதன் பேரில் வழக்கு பதிவு செய்த திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும்



கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் பால முருகன், சக்திவேல் ஆகியோர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பொறிவைப்பு நடவடிக்கையின் போது எட்வர்டிடமிருந்து லஞ்சப்பணம் ரூ.4000/த்தை புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் பிரிவு1 பணி ஆய்வாளர் லோகநாதன், என்பவர் கேட்டு பெற்று வைத்திருந்த போது கையும் களவுமாக பிடிபட்டார்.

இது தொடர்பாக திருச்சி மாவட்ட நீர்வளத்துறை, புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் பிரிவு1 உதவி பொறியாளர் அலுவலகத்தில் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினர் விசாரணை செய்து வருகின்றனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# ஆலாத்தூர் கிராமத்தில் 2017ஆம் ஆண்டு நடைபெற்ற கொலை வழக்கில் மூவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் அபராதம்

மதுரை மாவட்டம், ஊமச்சிகுளம் உட்கோட்டம், ஊமச்சிகுளம் காவல் நிலையத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கொலை வழக்கில், இன்று மதுரை 4வது கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில், ஊமச்சிகுளம் காவல் நிலைய சரகம் ஆலாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த பிச்சை (வயது 55), த/பெ. கம்பலத்தான் என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, ஆலாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த போக்கிரி சரித்திர பதிவேடு குற்றவாளிகளான: அதியபிரபு, த/பெ. ஆண்டிச்சாமி அருண்குமார், த/பெ. சக்திவேல் ஆண்டிச்சாமி, த/பெ. விஸ்வநா தன் ஆ



கிய மூவர் மீது ஊமச்சிகுளம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, காவல் துறையினரால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம், குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மூன்று குற்றவாளிகளுக்கும் ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.5,000/ அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. மதுரை மாவட்ட காவல் துறை, கொலை உள்ளிட்ட கொடுங்குற்றங்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலம் உரிய தண்டனை பெற்றுத்தந்து தொடர்ந்து உறுதியுடன் செயல்பட்டுவருகின்றது.

# கட்டிடங்களுக்கு உதவும் ரெனாஃபிளக்ஸ் பிராண்ட் ஃபைபர் சிமெண்ட் போர்டுகளை அறிமுகப்படுத்தியது ரெனாகான்





கோவை ஆகஸ்ட் 01

ஈரோட்டைச் சேர்ந்த ரெனாடஸ் குழுமம் தனது ரெனாடஸ் பிராடக்ட் பிரைவேட் லிமிடேட் நிறுவனத்தின் மூலம் ரெனாஃபிளக்ஸ் பிராண்ட் ஃபைபர் சிமெண்ட் போர்டுகளை அறிமுகப்படுத்தியது. பசுமையான, வேகமான மற்றும் பாதுகாப்பான கட்டிடங்களைக் கட்ட இந்த போர்டுகள் உதவும்.

₹350 கோடி முதலீட்டில் ரெனாகான், ஆந்திரப்பிரதேசத்தின் நாயுடுப்பேட்டையில் ஏ.ஏ.சி பிளாக்ஸ் ரேபிட் வால் பேனல்ஸ் மற்றும் ஃபைபர் சிமெண்ட் போர்டு ஆகியவற்றின் உற்பத்திக்காக உலகத் தரத்திலான ஒருங்கிணைந்த தொழிற்சாலையை நிறுவியுள்ளது. வெறும் 12 மாதங்களில் கட்டமைக்கப்பட்ட இந்தத்தொழிற்சாலை, உலகளவில் அளவுகோலாகக் கருதப்படும் லேமினார் ஃப்ளோ டெக்னாலஜியை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தி, நவீன கட்டுமானத்தின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய துல்லியபொறியியல் வடிவமைப்பைக் கொண்ட நிலையான கட்டுமானப் பொருட்களை வழங்குகிறது. இது குறித்து ரெனாடஸ் குழுமத்தின் தலைவர் பி.செல்வசுந்தரம் கூறுகையில், கோவையில் ரெனாஃபிளக்ஸ் பிராண்ட் அறிமுகமாவது, முழுமையான கட்டுமானத் தீர்வுகள் வழங்குநராக மாறும் ரெனாகானின் பயணத்தில் ஒரு மைல்கல் ஆகும். தென்னிந்தியாவின் மிக வேகமாக வளர்ந்து வரும் தொழில் துறை மற்றும் ரியல் எஸ்டேட் மையங்களில் ஒன்றாகிய கோவை, நவீன மற்றும் நிலையான கட்டுமான முறைகளை விரைவாக ஏற்றுக்கொண்டு வருகிறது

எங்களின் முதன்மை குடியிருப்புத் திட்டமான 'வரம்' மூலம் ஏற்கனவே கோவையில் வலுவான இருப்பை உருவாக்கியுள்ள நிலையில் ,தற்போது ரெனாஃபிளக்ஸ் அறிமுகத்தின் மூலம், இச்சந்தையின் மீது நாங்கள் கொண்டிருக்கும் நீண்டகால அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறோம். ரெனாகான், முதற்கட்டமாக தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய தென் மாநிலங்களில் கவனம் செலுத்தி பின்னர் ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா முழுவதும் உள்ள சர்வதேச சந்தைகளில் தனது போர்டுகளை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.


ரெனாடஸ் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மொத்த வணிகத்தில், 50% பங்களிப்பு ஏற்றுமதி வணிகத்தின் மூலம் கிடைக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. முன் தயாரிப்பு கட்டுமானம், நிலைத்த கட்டுமானப் பொருட்கள் மற்றும் தீமதிப்பீடு பெற்ற கட்டிட அமைப்புகளுக்கான தேவை அதிகரிப்பது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகள் இரண்டிலும் வலுவான வளர்ச்சிக்கு தூண்டிலாக அமையும் என நிறுவனம் எதிர்பார்க்கிறது என்று கூறினார்.

# ரோபோடிக் அறுவை சிகிச்சையில் புதிய பரிணாமம்: மீனாட்சி மருத்துவமனை சாதனை

மதுரையில் செயல்பட்டு வரும் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை (MSSH), அடுத்த தலைமுறை ★★Toumai™ MT1000 Pro★★ ரோபோடிக் அறுவைசிகிச்சை அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. ரோபோடிக் அறுவைசிகிச்சை துறையில் 10 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் பெற்றுள்ள இந்த மருத்துவமனை, உலகத் தரத்திலான மருத்துவ சேவையை தென் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த நவீன தொழில்நுட்பத்தை நிறுவியுள்ளது. இந்த புதிய அமைப்பு மூலம் சிக்கலான அறுவைசிகிச்சைகளையும் அதிக துல்லியத்துடனும் பாதுகாப்புடனும் மேற்கொள்ள முடியும் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது ரோபோடிக் அறுவைசிகிச்சை சேவையில் மருத்துவமனையின் அடுத்த முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

இந்த அதிநவீன ரோபோடிக் அமைப்பு குடல்–இரைப்பை அறுவைசிகிச்சை, கல்லீரல் மற்றும் பித்தநாள அறுவைசிகிச்சை, சிறுநீரகவியல், மகளிர் மருத்துவம், மார்பக மற்றும் தைராய்டு அறுவை சிகிச்சை, குழந்தைகள் அறுவைசிகிச்சை, புற்றுநோய் அறுவைசிகிச்சை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட உள்ளது. 3D உயர்தர காட்சி, மருத்துவர்களின் கை அசைவுகளை துல்லியமாக பிரதிபலிக்கும் ரோபோடிக் கருவிகள் மற்றும் மேம்பட்ட இமேஜிங் வசதிகள் இதில் இடம்பெற்றுள்ளன. இதன் மூலம் உடலின் குறுகலான பகுதிகளிலும் மிகத் துல்லியமாக அறுவைசிகிச்சை செய்ய முடிவதுடன், முக்கிய நரம்புகள் மற்றும் மென்மையான உறுப்புகளை பாதுகாக்கவும் உதவுகிறது.

இந்த ரோபோடிக் அமைப்பு உலகின் 60க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள மருத்துவமனைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், உலகளவில் பல்வேறு சிறப்புப் பிரிவுகளில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரோபோடிக் அறுவைசிகிச்சைகளில் இந்த தொழில்நுட்பம் பயன்பாட்டில் உள்ளது. இதன் அறிமுக விழாவில் நடிகரும் இசையமைப்பாளருமான விஜய் ஆண்டனி மற்றும் நடிகர் பிரசாந்த் தியாகராஜன் கலந்து





கொண்டுபுதியஅமைப்பை தொடங்கி வைத்தனர். மருத்துவமனையின் தலைவர் டாக்டர் எஸ். குருசங்கர், மருத்துவ இயக்குநர் டாக்டர் ரமேஷ் அர்த்தநாரி மற்றும் பல்வேறு துறைகளின் மூத்த மருத்துவ நிபுணர்களும் விழாவில் பங்கேற்றனர்.

விழாவில் பேசிய டாக்டர் எஸ். குருசங்கர், கடந்த 10 ஆண்டுகளாக ரோபோடிக் அறுவைசிகிச்சை மருத்துவமனையின் முக்கிய மருத்துவ சேவையாக இருந்து வருவதாகவும், Toumai™ MT1000 Pro அமைப்பின் அறிமுகம் அடுத்த தலைமுறை ரோபோடிக் தொழில்நுட்பத்தை நோக்கிய முக்கிய முன்னேற்றம் என்றும் தெரிவித்தார். மருத்துவர்களின் அனுபவத்துடன் மேம்பட்ட தொழில்நுட்பத்தை இணைப்பதன் மூலம் பாதுகாப்பான மற்றும் துல்லியமான அறுவைசிகிச்சையை வழங்கி, நோயாளிகள் விரைவாக குணமடைந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப உதவுவதே மருத்துவமனையின் நோக்கம் என்றும் அவர் கூறினார். டாக்டர் ரமேஷ் அர்த்தநாரியும், பல்வேறு சிறப்புப் பிரிவுகளில் இந்தரோபோடிக்அமைப்பு பயனுள்ளதாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

ரோபோடிக் அறுவைசிகிச்சை என்பது மருத்துவரின் முழுமையான கட்டுப்பாட்டில் நடைபெறும் குறைந்தபட்ச ஊடுருவல் கொண்ட சிகிச்சை முறையாகும். இந்த அமைப்பு தானாக செயல்படாது; மருத்துவரின் ஒவ்வொரு கை அசைவும் ரோபோடிக் கருவிகளால் மிகத் துல்லியமாக செயல்படுத்தப்படுகிறது.

இதனால் சிறிய கீறல்கள், குறைந்த ரத்த இழப்பு, குறைவான வலி, தொற்று அபாயம் குறைதல், மருத்துவமனையில் குறைந்த நாட்கள் தங்குதல் மற்றும் விரைவாக குணமடைந்து வழக்கமான வாழ்க்கைக்குத் திரும்புதல் போன்ற பல நன்மைகள் நோயாளிகளுக்கு கிடைக்கின்றன. தென் தமிழ்நாட்டில் உலகத் தரத்திலான, நவீன ரோபோடிக் அறுவைசிகிச்சை சேவையை மேலும் விரிவுபடுத்தும் முக்கிய முயற்சியாக இந்த புதிய அமைப்பின் அறிமுகம் பார்க்கப்படுகிறது.

# சேலம் மாநகராட்சி பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு

தமிழக அரசின் சார்பில் சேலம் மாவட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் செட்டிச்சாவடி பகுதியில் திடக்கழிவு மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் நுண்ணுயிரி உரம் தயாரிப்பு மையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த மையத்தில் நாள்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலமாக வீடுகளிலிருந்து சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை கொண்டு உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக உயிரி இயற்கை எரிவாயு தயாரிக்கும் மையம் அமைக்கும் பணிகள் நடந்து வருவது குறித்து ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக முடித்திட தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அஸ்தம்பட்டி மண்டலத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் ஆய்வு மேற்கொண்டு உணவின் தரம், பணியாளர்கள் விவரம், தினசரி உணவிற்கு வருகை தரும் பொதுமக்கள் குறித்த விவரம், உணவு பட்டியல், உணவு விற்பனை விலை விவரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார். உணவருந்த வருகை புரிந்த பொது மக்களிடம் உணவின் தரம்



மற்றும் சுவை குறித்து கேட்டறிந்தார். அஸ்தம்பட்டி கோட்டம் சேலம் மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் பணிபுரியும் சுகாதார பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த மையத்தில் நாள்தோறும் பயன்பெறும் பணியாளர் எண்ணிக்கை மற்றும் என்ன வகையான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரங்களையும், உணவின் சுவை குறித்தும் கேட்டறிந்தார். மேலும் வெங்கடப்பன் சாலை அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்குபயிலும்குழந்தைகள் எண்ணிக்கை குறித்தும், குழந்தைகளின் கற்றல் திறன் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு, குழந்தைகளின் எடை, உயரம் சரியாக உள்ளதா என்பது குறித்தும் அங்கன்வாடி பணியாளர்களிடம் கேட்டறிந்து குழந்தைகளுடன் கலந்துரையாடினார். இதை தொடர்ந்து குமாரசாமிப்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தை பார்வையிட்டு படுக்கை வசதி, புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் பிரிவு, பிரசவத்திற்கு பின் கவனிக்கும் முறை, மருந்தகம், ஆய்வகம் மற்றும் மருத்துவ வசதிகள் உள்ளிட்டவை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும் மரவனேரி பகுதியில் சாக்கடை கால்வாய் தூர்வாரும் பணி நடைபெற்று வருவது குறித்தும் ஆய்வு செய்தார். பின்னர் அம்மாபேட்டை மண்டல அணைமேடு பகுதியில் செயல்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும், மன்னார் பாளையம் பிரிவில் வர்மா கார்டன் பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டு வரும் பணிகளையும், வர்மா கார்டன் பகுதியில் செயல்பட்டு வரும் அறிவியல் பூங்காவின் செயல்பாடு குறித்தும், வாய்க்கால் பட்டறை பகுதியில் செயல்பட்டு வரும் தெரு நாய்களுக்கான பிறப்பு கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மையத்தின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் சேலம் மாவட்டத்தில் நடைபெறும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து சேலம் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் கலந்தாய்வு மேற்கொண்டார்.

# மார்த்தாண்டம் அருகே திருமண ஆசை காட்டி இளம் பெண்ணை பலாத்காரம் செய்து நகை, பணம் பறிப்பு; வாலிபர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஆக.1

மார்த்தாண்டத்தை அடுத்த கடையால் என்ற பகுதியை சேர்ந்த 28 வயது பெண் தனது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார். இவர் ஏவியேசன் பிரிவில் டிப்ளமோ படித்துள்ளார். இந்த நிலையில் இளம்பெண் களியல் அருகே அரகநாடு பகுதியில் உள்ள தனது அக்கா வீட்டிற்கு அடிக்கடி சென்று வருவது வழக்கம். அப்போது பக்கத்து வீட்டை சேர்ந்த அருண்(30) என்பவருடன் இளம் பெண்ணுக்கு பழக்கம் ஏற்பட்டு, நாளடைவில் ஒருவரை ஒருவர் தீவிரமாக காதலித்தனர்.

இதை அடுத்து கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி இளம் பெண்ணை அருண் தனது வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளார். அங்கு திருமண ஆசை வார்த்தைகள் கூறி இளம் பெண்ணை அருண் பாலியல் பலகாரம் செய்துள்ளார். பின்னர் 2024 ஆம் ஆண்டு இளம் பெண்ணை மீண்டும் தொடர்பு கொண்டு கன்னியாகுமரியில் ஒரு வேலை பார்த்து இருப்பதாகவும் அதற்கு நடக்க உள்ள நேர்காணலுக்கு கலந்து கொள்ள வருமாறு அழைத்துள்ளார். அந்தப் பெண் செல்ல மறுத்துள்ளார். உடனே அருண் அந்தப் பெண் தன்னுடன் நெருக்கமாக இருந்த புகைப்படங்கள் வீடியோக்கள் தன்னிடம் இருக்கிறது கூறி மிரட்டி உள்ளார். இதனால் பயந்து போன அந்தப் பெண் கன்னியாகுமரிக்கு சென்றுள்ளார். அங்கு விடுதியில் வைத்து இளம்பெண்ணை கட்டாயப்படுத்தி மீண்டும் பலாத்காரம் செய்துள்ளார்.

பின்னர் வீடியோக்களை வைத்து மிரட்டி தொடர்ந்து பல்வேறு இடங்களுக்கு அழைத்து சென்றதுடன், பல்வேறு நேரங்களில் ரூபாய் 5 லட்சம் மற்றும் 6 கிராம் தங்க நகை ஆகியவற்றையும் வாங்கி ஏமாற்றி உள்ளார்.

இதனால் விரத்தி அடைந்த இளம் பெண் மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். மகளிர் போலீசார் நடத்திய விசாரணையில் அருண் இளம்பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பலாத்காரம் செய்து வீடியோ எடுத்து மிரட்டி பணம், நகை பறித்தது தெரிய வந்தது. இதை தொடர்ந்து போலீசார் அருண் மீது வழக்கு பதிவு செய்தனர். அருண் தற்போது தலைமறைவு ஆகி விட்டார். தொடர்ந்து போலீசார் அவரை தேடி வருகின்றனர்.



# தவெக மாதவனுக்கு பிறந்தநாள் அகில இந்திய தமிழர் கழகம் முத்துக்குமார் வாழ்த்து

நாகர்கோவில்: ஆகஸ்ட் 01 கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தவெக செயலாளர் மாதவனின் 48வதுபிறந்தநாள்கொண்டாட்டத்தை கட்சி நிர்வாகிகள் இன்று நடத்த உள்ளார்கள். அதற்கு அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முத்துக்குமார் கூறியிருப்பதாவது: மக்கள்தளபதி விஜய்யின் நெஞ்சில் குடியிருக்கும்அன்புசகோதரர் எஸ்.ஆர். மாதவன் அவர்களுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை அகில இந்திய தமிழர் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த தேர்தலில் கன்னியாகுமரி தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட எஸ்.ஆர். மாதவன் 72,977 வாக்குகளை பெற்று, மாவட்டத்தில் பிரதான முக்கியஸ்தராக தவெகவில் முன்னேறியுள்ளார். அவர்களின் சமூக பணி மேன்மேலும் சிறக்க மனதார வாழ்த்துகிறேன். இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.

# வேலூர் அண்ணா சாலை புகழ்பெற்ற தொன் போஸ்கோ உயர்நிலை பள்ளியில் விளையாட்டு விழா

வேலூர் ஆக:01 வேலூர்மாவட்டம்வேலூர் அண்ணா சாலை புகழ்பெற்ற தொன் போஸ்கோ உயர்நிலை பள்ளியில் விளையாட்டு விழா மிக விமர்சியாக நடைபெற்றது விழாவிற்குஆர் சி எம் பள்ளிகள்மேலாளர் ஆருட் திரு A.லூர்து சேவியர். வி .எஸ். எஸ் .எஸ். இயக்குனர் வேலூர் எம்.அமலநாதன். பள்ளி தாளாளர் பேரருட் திரு முனைவர் A.ராய் லாசர்.ஆகியோர்தலைமை தாங்கினார்கள் முப்பள்ளிகள்நிர்வாகி தந்தை அருட்திரு டஜோசப்.செயல் பங்குத்தந்தை அருட்திரு லாரன்ஸ். மாவட்ட கல்வி அலுவலர் P. செந்தில்குமார்.Dl Vellore சைனி லியோ.ஆகியோர் முன்னிலவதித்தனர் மற்றும் வேலூர் மாவட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் தினேஷ் குமார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விளையாட்டு போட்டியை துவக்கி வைத்தார்மற்றும்



இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக அணைக்கட்டு வட்டம் மூளை கேட் அரசு பள்ளி தலைமை ஆசிரியர்ஜோசப் அன்னையா. மாமன்ற உறுப்பினர் தவமணி தாமோதரன். கால்பந்து வீரர் TNFA செல்வம்.முதல்வர்சேவியர்ஆங்கில பள்ளி அருட்சகோ எலிசபெத் ராணி.எஸ்டி மேரி சூப்பரியர்அருட் சகோ அமலி அலெக்சாண்டர். ST Mary higher secondary school சில்வியா.எஸ் டி மேரிஸ் பள்ளி அருட் சகோ லூர்து மேரி St Mary nursery school principalஅருட் சகோ கரோலின். Don Bosco PS HM. விஜயா. குத்தூஸ்.உள்ளிட்ட முன்னாள் பள்ளி மாணவர்கள் தாளாளர் நிர்வாகி தந்தைதலைமை ஆசிரியர்கள் உடற் கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்கள்பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் விளையாட்டு விழா ஒருங்கிணைப்பாளர்கள் சில்வர்ஸ்டர் அம்புரோஸ்.ஏ.டேவிட்.ஆகியோர் விளையாட்டு ஒருங்கிணைப்பாளராக செயலாற்றினார்கள் நடந்த போட்டியில்கலைநிகழ்ச்சி தடகளப் போட்டிஉள்ளிட்ட போட்டிகள் இடம் பிரச்சனை



# காங்கயம் சட்டமன்ற தொகுதி பொதுமக்கள் பிரச்சினைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் எம்.எல்.ஏ. நடராஜ் மனு

ஈரோடு ஆகஸ்ட் 1 காங்கயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஈரோடு மாவட்டப் பகுதிகளில் நிலவி வரும் முக்கிய பொதுமக்கள் பிரச்சினைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி, காங்கயம் சட்டமன்ற உறுப்பினர் என்.எஸ். என். நடராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில், ஈரோடு பெருந்துறை காங்கயம் (SH96) மாநில நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வந்த நிலையில், தற்போது பல இடங்களில் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, பிற சாலைகள் மாநில நெடுஞ்சாலையுடன் இணையக் கூடிய சந்திப்புகளில் குறுக்கு பாலப் பணிகள் நிறைவடையாமல் இருப்பதால் வாகன ஓட்டிகளுக்கும் பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுவதுடன், சாலை விபத்துகளில் உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன.

மேலும், கீழ்பவானி அணையிலிருந்து ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி பாசனத்திற்காகத்தண்ணீர்திறக்கப்படும் நிலையில், கீழ்பவானி பிரதான கால்வாயில் பசுவட்டி கிராமம் தோப்புக்காடு அருகே மாநில நெடுஞ்சாலை கால்வாயைக் கடக்கும் இடத்தில் நடைபெற்று வரும் பாலப் பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் ஆகஸ்ட் 15 இல் தண்ணீர் திறக்கப்படும் போது பாசன நீர் விநியோகத்திற்கு இடையூறு ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான விவசாயிகளின் சாகுபடி பணிகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதால், இந்த சாலை மற்றும் பாலப் பணிகளை விரைந்து முடித்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சென்னிமலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடிநீர் விநியோகம் முறையாக நடைபெறாததால் பொதுமக்கள், குறிப்பாகப் பெண்கள் மற்றும் முதியோர்கள் அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட குடிநீர் இன்றி அவதிப்பட்டு வருகின்றனர்.

எனவே, சென்னிமலை பகுதியில் குடிநீர் விநியோகத்தை உடனடியாகச் சீரமைத்து, தேவையானஇடங்களில்கூடுதல் மற்றும் மாற்றுக் குடிநீர் விநியோக ஏற்பாடுகளைச் செய்து நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றும், இவ்விரு கோரிக்கைகள் குறித்தும் சம்பந்தப்பட்டதுறை அலுவலர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கி விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் மனுவில் அவர் வலியுறுத்தியுள்ளார்.



தருமபுரி மாவட்டம் மதிகோண்பாளையத்திலுள்ள ராகி கொள்முதல் நிலையத்தை மாவட்ட ஆட்சியர் சரவணன் திடீர் ஆய்வு மேற்கொண்டார் இந்த ஆய்வின் போது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மேலாளர் துரைசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தருமபுரியில் ஆடி வெள்ளியை முன்னிட்டு அம்மன் கோவில்களில் சிறப்பு வழிபாடு



தருமபுரி ஆகஸ்ட் 01 தருமபுரி குமாரசாமிபேட்டை அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன், அரிச்சந்திரன் கோவில் தெரு அருள்மிகு ஸ்ரீ சக்தி மாரியம்மன் திருக்கோவில்களில் ஆடி வெள்ளிக்கிழமையை முன்னிட்டு அம்மனுக்கு அதிகாலையில் சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள், தீபாரதனைகள் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் தங்க கவசத்திலும், அருள்மிகு ஸ்ரீ சக்தி மாரியம்மன் சிறப்பு அலங்காரத்திலும் பக்தர்களுக்கு காட்சியளித்தனர்.

இதில் குமாரசாமி பேட்டை பகுதியிலுள்ள பக்தர்கள், பொதுமக்கள் திரளாக பங்கேற்று அம்மனை வழிபட்டனர். திருக்கோவில் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு கூட்டம்




திருப்பத்தூர்:ஆக:01, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு கூட்டம், மாவட்ட ஆட்சியர் கு. ரவிகுமார். நடைபெற்றது.

இக்கூட்டத்தில்,மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்; தெரிவித்ததாவது: திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான மாவட்ட அளவிலான கண்காணிப்புக்கூழு கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் தேசிய ஊரக வேளாண் வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வணிக செயல்பாடு குறித்து விரிவாகக் கேட்டறியப்பட்டது. மேலும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வணிக செயல்பாட்டினை விரிவுபடுத்திட பல்வேறு ஆலோசனைகளை வழங்கப்பட்டது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சார்பாக மல்லிகை பூ ஏற்றுமதி மற்றும் சிப்பம் கட்டும் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி வழங்குமாறு கோரிக்கை வைத்தனர். மேலும் ஏலகிரி மலையில் உள்ள பழங்குடியினர் உழவர் உற்பத்தியளார் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்யும் ரோஜா மலர்களை அருகில் உள்ள ஒசூர் மற்றும் பெங்களூர் போன்ற இடங்களுக்கு சந்தைப்படுத்திட சந்தை வாய்ப்பினை உருவாக்கி தருமாறு துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், வேளாண்மை இணை இயக்குநர் திருமணி, வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) கார்த்திகேயன். தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி.தீபா. கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் மீனாட்சி. கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் சீனிவாசன் தேசிய ஊரக வேளாண் வளர்ச்சி (நபார்டு) வங்கி மேலாளர் ஸ்ரீபாதராஜன், பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# காவேரிப்பட்டணத்தில் ஓய்வு பெற்ற அலுவலர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி ஆக. 1: கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றிய தலைவர் விஸ்வநாதன் தலைமையில், மாநில செயற்குழு முடிவின்படி தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ காப்பீடு திட்ட அரசாணை எண் 123 திருத்தம் செய்யக்கோரி நடைபெற்றது. ஒன்றிய செயலாளர்கள் நந்தகோபால் வரவேற்று பேசினார். பொருளாளர் முருகன் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தின் போது புதிய மருத்துவ காப்பீடு திட்டம் 2026 இல் உள்ள குறைகளை கலைந்து திருத்தம் செய்து உத்தரவிட வேண்டும், மருத்துவ காப்பீடு மாத பிரிமியம் தொகையை ரூபாய் 644 இல் இருந்து 390ஆக குறைக்க வேண்டும், ஓய்வூதியர்களுக்கு காசு இல்லாமல் மருத்துவம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும், மருத்துவ காப்பீடு அட்டையை உடனே வழங்க வேண்டும், மருத்துவ காப்பீடு திட்டம் தொடர்பாக சங்கங்களை அழைத்து பேச வேண்டும், மருத்துவ காப்பீடு திட்டத்தை அரசு ஏற்று நடத்த வேண்டும், மாத மருத்துவ படி ரூபாய் ஆயிரம் வழங்க வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஜெயக்குமார் துவக்க உரையாற்றினார். சிவக்குமார்,டாக்டர் வேடியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிகழ்ச்சியில் முன்னாள் தலைவர் சுப்பிரமணியம், திருநாவுக்கரசு, தண்டபாணி, சொக்கநாதன், பெரியண்ணன், கோவிந்தன், பானுபூனுஸ்கான், இளங்கோவன், விஸ்வநாதன், கேசவன் ,ராமலிங்கம்உள்ளிட்ட ஓய்வு பெற்ற அலுவலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் கோவிந்தராஜன் நன்றி கூறினார்.

# காசோலை மோசடி திருச்சி போக்குவரத்து தலைமை காவலருக்கு ஓராண்டு சிறை



திருச்சி, கருமண்டபத்தை சார்ந்தவர் மனோகர்.

இவரிடம் திருச்சி மாநகர காவல்துறையில் போக்குவரத்து ஒழுங்கு பிரிவில் தலைமை காவலராக பணியாற்றும் ரவி என்பவர் கடந்த 2022ம் ஆண்டு கடனாக ரூபாய் 5இலட்சம் வாங்கியிருந்தார்.

மேற்படி கடன் தொகையை திருப்பி தரும் பொருட்டு காசோலை ஒன்றை மனோகரிடம் கொடுத்துள்ளார். ஆனால், மேற்படி காசோலை பணமில்லாமல் திரும்பியுள்ளது.

இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட மனோகர் திருச்சிராப்பள்ளி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 3ல் ரவிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்தார்.

இதனிடையே மேற்படி வழக்கிற்கானதீர்ப்பு நேற்று 30.07.2026ந் தேதி நீதிபதி முகமது சுகைல் என்பவரால் வழங்கப்பட்டதுஅதன்படி,மேற்படிகாசோலை மோசடி வழக்கில் எதிரி ரவி குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்டு, தலைமைக் காவலர் ரவிக்கு ஓராண்டு கால சிறை தண்டனையும், புகார்தாரருக்குகொடுக்க வேண்டிய காசோலை தொகையை அபராதமாக விதித்தும் அதிரடியாக தீர்ப்பளித்துள்ளார். மேலும் மேற்படி காசோலை தொகையை ரவி கொடுக்காத பட்சத்தில் கூடுதலாக இரண்டு மாத சிறை தண்டனை அனுபவிக்கும்படியும், எதிரி பிணையில் வெளிவர முடியாத பிடியாணையையும் பிறப்புத்து தீர்ப்பு வழங்கியுள்ளார். இந்த தீர்ப்பால் திருச்சி மாநகர காவல்துறையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் மேற்படி எதிரி ரவி திருச்சி காவல் சரகங்களில் பல்வேறு உயர் அதிகாரிகளுடன் பணியாற்றியவர் என்பதும், மேற்படி வழக்கில் புகார்தாரருக்கு ஆதரவாக வழக்கறிஞர் எஸ்.ஆர். கிஷோர்குமார் ஆஜரானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# தருமபுரியில் காலமுறை ஊதியம் வழங்க கோரி சத்துணவு ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் பெருந்திரள் முறையீடு போராட்டம்

தருமபுரி ஆகஸ்ட் 01 தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு காலமுறை ஊதியம் வழங்க கோரி தமிழ்நாடு சத்துணவு ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் பெருந்திரள் முறையீடு போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்திற்கு மாவட்ட தலைவர் கே. தேவகி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பெ. மகேஸ்வரி , பொருளாளர் பி. வளர்மதி,மாவட்டநிர்வாகிகள் அனுசுயா, ஜெயா, சங்கீதா, ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஏ. தெய்வானை,மாவட்ட இணை செயலாளர் மீன் முருகன், அகிலன், அமிர்தராஜ், ஓய்வு பெற்ற சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சி. காவேரி, டாக்டர் ஜியோநிதி, காப்பாளர் கே. புகழேந்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர். தமிழ்நாடு அரசின் கடைநிலை ஊழியர்களாக இருக்கும் சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும். காலை உணவு திட்டத்தை சத்துணவு திட்டத்தோடு இணைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடைபெற்றது.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 449 பள்ளி களில் விழிப்புணர்வு மன்றங்கள் மூலமாக போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை

## மாவட்ட கலெக்டர் ரேவதி தகவல்

தஞ்சாவூர் ஆகஸ்ட் 1 தஞ்சாவூர் மாவட்டத்தில் 449 பள்ளி களில்விழிப்புணர்வு மன்றங்கள் மூலமாக போதை பொருள் ஒழிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கலெக்டர் ரேவதி கூறினார்

இதுகுறித்து அவர் வெளியிட்டு ள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 449 அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில்9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் பயின்று வரும் மாணவர் களை கொண்டு போதை பொருள் களால் ஏற்படும் கடுமையான பாதிப்புகள்குறித்து மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வித மாக போதை பொருள் தடுப்பு மற்றும் போதை பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு மன்றம் செயல்பட்டு வருகிறது

இந்த மன்றங்களின் மூலம் விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் அறிவிப்பு பலகைகள் மூலம் போதை பொருள்களால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது அதன் ஒரு பகுதியாக தஞ்சாவூர் மாவட்டத்தில் பள்ளிகளை சுற்றி இரு 200 மீட்டர் சுற்றளவில் போதை பொருட்கள் விற்பனையை தடை செய்யும் இடமாக அரசால் அறிவிக்கப்பட்டு போதை பொருள்கள் தடை செய்யப்பட்ட பகுதி என்ற வாசகம் காட்சிப்படுத்தப்பட்டு வருகிறது. இது வரை 300 பள்ளிகளில் இந்த பணி முடிக்கப்பட்டுள்ளது




மீதமுள்ள பள்ளிகளில் நிர்வாக த்தின் வழிகாட்டுதல்களின்படி கல்வித்துறையால் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது பள்ளிகளில் இளம் செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அத்துடன் போதை பொருள்களில் தீங்குகள் குறித்து சுவரொட்டிகள் மற்றும்பிறவிழிப்புணர்வு பதாகை கள் பள்ளி வளாகத்திற்கு காட்சிப்படுத்த அறிவுறுத்தப்பட்டு ள்ளது

மேலும் தமிழக அரசால் அறிமுக ப்படுத்தப்பட்டுள்ள,DRUG FREE TN என்ற அலைபேசி செயலி மூலம் தங்கள் அருகாமையை கடைகளில் போதை பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப்பொருள் நடமாட்டம் குறித்து பொது மக்கள் தங்களின் சுய விவரங்களின்றி புகார் செய்யலாம் என்பது தொடர் பாகவும் போதைப் பொருள்கள் புழக்கத்தை முற்றிலும் ஒழிப்பது தொடர்பாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்த கல்வித்துறை மாவட்ட நிர்வாகத்தால் தொடர்ந்து நடவடி க்கை எடுக்கப்பட்டு வருகிறது இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# வளரும் பருவத்தினரின் மனநிலை பற்றிய புத்தகம் ஈரோட்டை சேர்ந்த இளம் பெண் மானசி சாதனை

## அமைச்சர் செங்கொட்டையன் பாராட்டு



ஈரோடு, ஆக.1

ஈரோட்டை சேர்ந்தவர் கவுதமன். இவரது மகள் மானசி. வளரிளம் பருவத்தினரின் மனநல விழிப்புணர்வுக்காகக்குரல் கொடுக்கும் மாணவி மானசி அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாநிலம் டாலஸ் நகரில் உள்ள பள்ளியில் படித்து வருகிறார். 15 வயதே ஆன இவர் இன்றைய உலகில் வளரிளம் பருவத்தினரின் மனநலம், தன்னம்பிக்கை, உணர்வும் அறிவும் இரண்டறக்கலந்த வளர்ச்சி ஆகியன முக்கியமான பிரச்சனைகளாக உருவெடுத்திருக்கும் நிலையில், தமிழ்நாட்டிலிருந்து ஓர் இளம் பெண் தன் எழுத்தின் மூலம் இந்திய அளவிலும் உலக அளவிலும் கவனம் பெற்றுள்ளார்.

மாணவி மானசி தன் முதல் நூலான *Mind Mahatva The Teen Mind Matters* மனநலம் குறித்த விழிப்புணர்வை ஊட்டி தேசிய மற்றும் உலக அளவில் கவனத்தை ஈர்த்ததுடன் பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

வளரிளம் பருவத்தினரின் மனநிலை, தன்னம்பிக்கை, அடையாளத் தேடல், நட்பு, சமூக ஊடகங்களின் தாக்கம், கல்விச் சுமை, தனிமை, மனஅழுத்தம், உணர்வும் அறிவும் இரண்டறக்கலக்கும் சிக்கல், விழுமியங்களின் அழுத்தம், முரண்பாடுகள், சவால்கள் இவற்றை வளரிளம் பெண்ணின் பார்வையில் இயல்பாகவும் எளிமையாகவும் இந்நூல் விளக்குகிறது.

இதுவரை இளையோருக்காக பெரியவர்கள் எழுதியதே வரலாறாக இருந்துள்ளது. ஆனால் இந்நூல் ஓர் இளம்பெண்ணால் இளம்தலைமுறையினரின் உணர்வுகளைப் புரிந்து எழுதப்பட்டிருக்கிறது. இதுவே *Mind Mahatva The Teen Mind Matters* என்ற நூலின் தனிச்சிறப்பாகும். இளம் தலைமுறையினருக்கிடையே மனம் திறந்த உரையாடல்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

ஆங்கிலத்தில் வெளியாகி இந்தியா, அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளில் அமேசான் தளத்தில் பல்வேறு பிரிவுகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் இதன் பன்னாட்டு வரவேற்பைத் தொடர்ந்து உலகின் முன்னணிப் பதிப்பகங்கள் பல இந்நூலின் வெளியீட்டு உரிமையைப்பெற ஆர்வம் தெரிவித்துள்ளன.

இந்நூல் ஆசிரியர் சாதனையை ஏற்கும் வகையில் *India Book of Records*, *Asia Book of Records* ஆகிய இரு நிறுவனங்களும் இவரை இந்தியாவின் இளம் வயது எழுத்தாளர் என்று சிறப்பித்துள்ளன. அமெரிக்காவில் கல்வி பயின்றாலும் இந்திய விழுமியங்களையும் தமிழ்ப் பண்பாட்டையும் தன் அடையாளங்களாகக் கொண்டு உலகளவில் நடத்திவரும் தனது எழுத்துப்பயணத்தில் உலகெங்குமுள்ள கல்வியாளர்கள், மாணவர்கள் மற்றும் வாசகர்களிடமிருந்து இவர் பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

மாணவி மானசி தனது பெற்றோருடன் தமிழ்நாடு அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையனை மரியாதை நிமித்தமாக சந்தித்து, அவரது வாழ்த்துக்களைப் பெற்றார். அப்போது அமைச்சர் செங்கோட்டையன் மாணவி மானசியை பாராட்டு புத்தகத்தில் பல தன்னம்பிக்கை பற்றி ஏராளமான தகவல்கள் உள்ளதாகவும் இது போல் ஊக்குவிக்கும் பல புத்தகங்களை எழுதி சாதனை படைக்குமாறும் எதிர்காலத்திலும் இது போன்ற சமூகப் பங்களிப்புகளைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

# கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் களப பூஜை

## நாளை மறுநாள் நடக்கிறது

கன்னியாகுமரி, ஆக.1

பிரசித்தி பெற்ற கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் ஆடி மாதம் களப பூஜை நடைபெறுவது வழக்கம் அதனையொட்டி, நாளை மறுநாள் (திங்கட்கிழமை) ஆடி களப பூஜை தொடங்குகிறது.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆடி களப பூஜை நாளை மறுநாள் திங்கட்கிழமை தொடங்குகிறது. இதனையொட்டி காலை 10 மணிக்கு சிறப்பு களப பூஜை நடைபெறும். முதல் நாள் களப் பூஜை காலை 10 மணிக்கு திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் அதன் மடாதிபதி திருக்கயிலாய பரம்பரை 24வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கும் தங்க குடத்தில் வாசனைத் திரவியங்கள் நிரப்பி சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

களப பூஜை ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி நிறைவடைகிறது. தொடர்ந்து 12 நாட்கள் ஆடி களப பூஜை நடைபெறுகிறது பதின்மூன்றாம் நாள் உதயாஸ்தமன பூஜை மற்றும் அதிவாசஹோம் பூஜையும் நடைபெறும். இதையொட்டி தினமும் காலை 4.30 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு நிர்மால்ய பூஜை விஸ்வரூப தரிசனமும் பின்னர் 5 மணிக்கு அம்மனுக்கு அபிஷேகம் காலை 6 மணிக்கு தீபாராதனையும் 7 மணிக்கு ஸ்ரீ பலி பூஜை உச்சிகால பூஜையும் தீபாராதனையும் நடைபெறுகிறது 10 மணிக்கு அம்மனுக்கு நடைபெறும் சிறப்பு களப அபிஷேகத்தை மணலிக்கரை மாத்தூர் மடம் தந்திரி சஜித் சங்கரநாராயணரூ செய்கிறார். 11 மணிக்கு தங்க ஆபரணங்கள் மற்றும் வைர கிரீடம் வைரக்கல் மூக்குத்தி அணிவிக்கப்பட்டு சந்தனகாப்பு அலங்காரத்துடன் பக்தர்களுக்கு அம்மன் அருள்பாலிக்கும் நிகழ்ச்சி நடக்கிறது அதனைதொடர்ந்து 11.30 மணிக்கு அலங்கார தீபாராதனை மாலை 6.30 மணிக்கு சாயரட்சை தீபாராதனை இரவு 8 மணிக்கு சிறப்பு பூஜையும் பின்னர் அம்மன் வெள்ளி பல்லக்கில் எழுந்தருளச் செய்து கோவில் பிரகாரத்தை சுற்றி மேளதாளம் முழங்க மூன்று முறை வலம் வரும் நிகழ்ச்சியும் நடைபெறும் அதைத்தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு அம்மனுக்கு வெள்ளி சிம்மாசனத்தில் தாலாட்டும் அத்தாழ பூஜையும் ஏகாந்த தீபாராதனையும் நடைபெறும். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் இதற்கான ஏற்பாடுகளை கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் சரவணன் அறிவுறுத்தலின்படி தருமபுரி மாவட்டம் மற்றும் வட்டம் கோடு அள்ளி தரப்பு ராமதாஸ் தண்டா கிராமத்தில் சட்ட விரோதமாக செயல்பட்டு வந்த சாயப்பட்டறைகள் 4 மற்றும் நல்லம்பள்ளி வட்டம் தொப்பூர் தரப்பில் இரண்டு என மொத்தம் ஆறு சட்ட விரோத சாயப்பட்டறைகள் இடித்து அகற்றப்பட்டது.

# விவசாயிகள் கூட்டத்தில் விவசாயிகள் கண்களைக் கட்டிக் கொண்டு வெளி நடப்பு

## திருவள்ளூரில் பரபரப்பு



திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் நலன் காக்கும் குறை தீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் பயிர் கடனை தமிழக அரசு முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என இரு கண்களை கட்டிக்கொண்டு கோசமிட்டு வெளிநடப்பு செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது,

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா, தலைமையில் மாதாந்திர விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் நடைபெற்றது,

இக்கூட்டத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு மற்றும் மின் வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்கின்றனர்,

இதில் விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக எழுதி மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப்பட்டன,

அப்பொழுது திருத்தணி, அடுத்த ஆர்கே பேட்டை, ஒன்றியத்திற்குட்பட்ட 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், விவசாயிகளின் பயிர் கடன்களை தமிழக அரசே முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதாவிடம், கோரிக்கை மனு அளித்த நிலையில் கண்களை கருப்பு துணையால் கட்டியபடி விவசாய நலன் கூட்டத்தில் கண்டன கோஷம் எழுப்பிய வாறு கூட்டத்தை புறக்கணிக்கப்பட்டு வெளிநடப்பு செய்தனர், இதனால் விவசாய நலன் கூட்டத்தில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது

# லால்குடியில் மக்கள் தொடர்பு முகாம்: 302 பயனாளிகளுக்கு ரூ. 91.14 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்



திருச்சி மாவட்டம் லால்குடி அருகே உள்ள புதூர் உத்தமனூர் கிராமத்தில் உள்ள துரைசாமிஅய்யனார்கோவில் வளாகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது.

லால்குடி வருவாய் கோட்டாட்சியர் ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திருச்சி மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

நலத்திட்ட உதவிகள் வழங்கியபோது மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி பேசியதாவது;

மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகள் மக்களை நேரடியாகச் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்படுகிறது.

அரசுத் துறைகளின் சார்பில் வழங்கப்பட்டு வரும் கடனுதவிகள், மானியங்கள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள்எளிதில்அறிந்து கொள்ளும் வகையில் இங்கு அரங்குகள் அமைக்கப்பட்டன. குறிப்பாக, ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) மூலம் சுயஉதவிக் குழுப் பெண்கள் இன்று தொழிலமுனைவோராக உருவெடுத்துள்ளனர். இளைஞர்கள் தொழில் தொடங்க மாவட்ட தொழில் மையம் மூலமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமும் பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இம்முகாம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து 155 மனுக்களும், முகாம் நாளில் 55 மனுக்களும் என மொத்தம் 210 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட அனைத்து மனுக்களும் இணையத்தில் பதியப்பட்டு ஒப்புகைச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

இம்மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் உரிய விசாரணை நடத்தி, தகுதியான பயனாளிகளுக்கு உடனடியாக நலத்திட்ட உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்த நிகழ்வில் லால்குடி வருவாய் வட்டாட்சியர் தமிழ்ச்செல்வன் உட்பட வருவாய்த்துறையினர் மற்றும் பல்வேறு அரசுத்துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள், பொது மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். முன்னதாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி ஸ்டால்களை மாவட்ட வருவாய் அலுவலர் பார்வையிட்டார்.

# ஈரோடு மாவட்டத்தில் சி.பி.எஸ். ஓய்வூதியர்களுக்கு இடைக்காலத் தொகை, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிப்பு

ஈரோடு, ஆக.1

தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 01.01.2026 முதல் சி.பி.எஸ். திட்டத்தில் ஓய்வு பெற்ற அல்லது இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதாந்திர இடைக்காலத் தொகை வழங்கப்பட உள்ளது. இதற்காக, சம்பந்தப்பட்டவர்கள் தாங்கள் இறுதியாக பணியாற்றிய அலுவலகத்தில் விருப்பப்படிவத்தை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 01.07.2026 முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இதில் அரசு ஊழியர்களுக்கு ரூ.12 லட்சம், ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.7.5 லட்சம் வரை காப்பீட்டு வசதி வழங்கப்படுகிறது. புதிய *ecard* வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதால், அரசு ஊழியர்கள் குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை தாங்கள் பணியாற்றும் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், கூடுதல் விவரங்களுக்கு ஈரோடு மாவட்டக் கருவூல அலுவலரை தொடர்புகொள்ளலாம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

# சேலம் மாவட்டத்தில் காலியாக உள்ள பணியிடங்களை தற்காலிகமாக நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அபிநவம் மற்றும் ஏற்காடு ஏகலைவா உண்டு உறைவிட பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை 2026 2027 ஆம் ஆண்டிற்கான காலியாக உள்ள பட்டதாரி / முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத காலிபணியிடங்களை தற்காலிகமாக நிரப்பும் பொருட்டு பணி நாடுனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதில் SC&ST இனத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதன்படி ஸ்போக்கன் இங்கிலீஷ் (முதுநிலை) பணிக்கு 2 நபர்கள், ஸ்போக்கன் இங்கிலீஷ் இளநிலை பணிக்கு 2 நபர்கள், இசை ஆசிரியர் பணி 2 நபர்கள், ஆர்ட் டீச்சர் பணிக்கு 1நபர், கவுன்சிலர் பணிக்கு 2 நபர்கள், ஸ்டாஃப் நர்ஸ் பணிக்கு 2 நபர்கள், ஜூனியர் அசிஸ்டன்ட் பணிக்கு 3 நபர்கள், ஓட்டுனர் பணிக்கு 1 நபர், அலுவலக உதவியாளர் பணிக்கு 1நபர், தூய்மை பணியாளர் பணிக்கு 1நபர் என மேற்கண்ட அனைத்து பணிகளுக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத தொகுப்பு ஊதிய பணியாளர்கள் 2026 2027 கல்வி ஆண்டு முடியும் வரை மட்டுமே பணியில் தொடர முடியும் என்பதால் தற்காலிக பணியிடத்திற்கு தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தகுதியான நபர்கள் தங்களது விண்ணப்பங்களை சேலம் மாவட்ட ஆட்சியரகம் மூன்றாவது தளத்தில் உள்ள அறை எண் 305 ல் செயல்பட்டு வரும் பழங்குடியினர் நல திட்ட அலுவலகத்தில்வருகிற06.08.2026க்குள் சமர்ப்பிக்குமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# சென்னை வேர்மேட் கண்காட்சியை அமைச்சர் பி. மதன்ராஜா துவக்கி வைத்தார்




சென்னை, ஆகஸ்ட் 01,

புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களே நாளைய தொழில்துறை வளர்ச்சியை வழிநடத்தும்" என்று சென்னை வேர்மேட் (WAREMAT ) கண்காட்சியை துவக்கி வைத்து அமைச்சர் பி. மதன் ராஜா பேசினார்.

இந்தியாவின் கிடங்கு மேலாண்மை, மெட்டீரியல் ஹேண்ட்லிங், லாஜிஸ்டிக்ஸ், பேக்கேஜிங், தொழில்துறை தானியக்கம் மற்றும் ரோபோட்டிக்ஸ் துறைகளுக்கான "வேர்மேட், டோபேக், ஆட்டோ ரோபோ காஸ்லாக், டபிள்யூ. எஸ் ஏ.யூ.டி.எக்ஸ் 2026 என்ற மூன்று நாள் தொழில்துறை கண்காட்சியை, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பி. மதன் ராஜா தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் எஃப்.ஐ.சி.சி ஐ தொழில் கூட்டமைப்பின் இணைத் தலைவர் பூபேஷ் நாகராஜன், டான்ஸ்டியா தலைவர் எஸ். வாசுதேவன், சி.ஐ. தலைவர் டி. தேவகுமார், ஆந்திரா சேம்பர் ஆஃப் காமர்ஸ் துணைத் தலைவர் எஸ். நரசிம்மன், எம்.எஸ்எம்.இ இயக்குநர் தயாளன் உள்ளிட்ட தொழில்துறை முன்னோடிகள் பங்கேற்றனர்.

அமைச்சர்பி. மதன் ராஜா பேசுகையில், "தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சியில் எம்.எஸ் எம்.இ நிறுவனங்கள் மிக முக்கிய பங்காற்றி வருகின்றன. ஒரு தொழிற்சாலையின் வெற்றி தரமான தயாரிப்புகளை உருவாக்குவதில் மட்டுமல்ல; கிடங்கு மேலாண்மை, பொருள் கையாளுதல், பேக்கேஜிங் மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மையை நவீன தொழில் நுட்பங்களுடன் ஒருங்கிணைப்பதிலும் உள்ளது. வேர்மேட்போன்ற கண்காட்சிகள் புதிய தொழில் நுட்பங்களை நேரில் அறிந்து கொள்ளவும், வணிகத் தொடர்புகளை உருவாக்கவும், புதிய சந்தைகளை அடையவும் சிறந்த வாய்ப்பாக அமைகின்றன.

இத்தகைய தொழில்நுட்பங்களை விரைவாக ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களே உலகளாவிய போட்டியில் முன்னிலை பெறும். தமிழ்நாட்டின்தொழில்நிறுவனங்கள் இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும்," என்றார்.

*Midaas Touch Events & TradeFairsLLP* நிறுவனத்தின் இயக்குநர் திரு. டி. விவேகானந்தன் பேசுகையில், "தென்னிந்தியாவின் மிக முக்கிய தொழில்துறை B2B தளமாக WAREMAT தொடர்ந்துவளர்ச்சிபெற்று வருகிறது. தொழில்நுட்ப வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களை ஒரே தளத்தில் இணைத்து புதிய வணிக வாய்ப்புகளையும் தொழில்நுட்ப கூட்டாண்மைகளையும் உருவாக்குவதே இந்தக் கண்காட்சியின் நோக்கமாகும்," என்றார்.

ஆகஸ்ட் 1ஆம் தேதி வரை நடைபெறும் இக் கண்காட்சியில் 100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், 120க்கும் மேற்பட்ட தயாரிப்புகள் மற்றும் தொழில் நுட்பங்களை காட்சிப்படுத்தியுள்ளன. B2B வணிக சந்திப்புகள், அறிவுப் பரிமாற்ற அமர்வுகள், நேரடி தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் உள்ளிட்டவை நடைபெறுகின்றன. 8,000க்கும் மேற்பட்ட தொழில் துறை வல்லுநர்கள் இக் கண்காட்சியை பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

# களியக்காவிளை அருகே விபத்து பால் வேனில் பைக் மோதி; 2 தொழிலாளர்கள் சாவு

களியக்காவிளை, ஆக.1

கேரள மாநிலம் பூவார் புதியதுறை பகுதியை சேர்ந்தவர்கள் சஜி (50), மணி (50). பெயிண்டின் தொழிலாளர்கள். இருவரும் குமரி மாவட்டம் ஆற்றூர் பகுதிக்கு பெயிண்டிங் வேலைக்காக நேற்று வந்தனர். கேரளத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் அதிகாலையில் புறப்பட்டவர்கள் களியக்காவிளை அருகே உள்ள படந்தாலுமூடு என்ற பகுதிக்கு நேற்று காலை 6 மணி அளவில் வந்து சேர்ந்தனர். அவர்கள் அப்பகுதியில் உள்ள கடையில் டீ குடித்து விட்டு வேலை செல்வதற்காக மீண்டும் மோட்டார் சைக்கிளை எடுத்து புறப்பட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த பால்வேன் ஒன்று இவர்களது மோட்டார் சைக்கிள் மற்றும் மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இதில் பயணம் செய்த மூன்று பேரும் தூக்கி வீசப்பட்டனர்.

இதில் கேரள தொழிலாளர்கள் வந்த மோட்டார் சைக்கிள் வந்த தொழிலாளர்களில் ஒருவர் டெம்போ சக்கரத்தில் சிக்கினார். இதில் சுமார் 100 மீட்டர் தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார். அந்த தொழிலாளி உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவருடன் வந்த மற்றொரு தொழிலாளி மற்றும் மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் 2 பேரும் படுகாயம் அடைந்தனர். இந்த விபத்து குறித்த தகவல் அறிந்த களியக்காவிளை போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர்.

பால்வேன் சக்கரத்தில் சிக்கி உயிரிழந்த தொழிலாளியின் உடலை மீட்டு குமரி அரசு மருத்து கல்லூரி ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். காயம் அடைந்த இருவரையும் விட்டு சிகிச்சைக்காக அந்த பகுதியில் உள்ள மருத்துவமனை இல் சேர்த்தனர். இந்த சம்பவத்தால் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கலிய கவலை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் மற்றொரு கேரள தொழிலாளி குமரி அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனால் பலி எண்ணிக்கை 2 ஆக உயர்ந்தது.




வேலூர் தொரப்பாடியில் தமிழக புரட்சி கழகம் மற்றும் கருகரி மருத்துவமனை சார்பில் இலவச கண் சிகிச்சை மற்றும் கண்புரை பரிசோதனை முகாம் நடைபெற்றது. முகாமை நிறுவனத் தலைவர் ஜி.எஸ். இக்பால் தொடங்கி வைத்தார். முன்னாள் எம்.எல்.ஏ. ப. கார்த்திகேயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முகாமில் பொதுமக்களுக்கு கண் பரிசோதனை, மருத்துவ ஆலோசனை மற்றும் மேல்சிகிச்சைக்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.